இலவச காலாண்டு சமய இதழ்

# அகர தீபம்

www.akaram.eu

14.01.2019 - 13.04.2019

FREE MAGAZINE



# புங்குடுதீவு கிராஞ்சியம்பதி சிவன் கோவில்

மாலை : 05 மலர் : 04

திருவள்ளுவர் ஆண்டு 2050

# நுழைவாயில்..




**அகர தீபம் வாசக அன்பர்களுக்கு,**

ஆங்கில புதுவருடம் மற்றும் தமிழர் திருநாளாம் தைப் பொங்கலுக்கும் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம். "தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை, தந்தை சொல் மிக்க ஒரு மந்திரமும் இல்லை" என்பதே தமிழரின் கடவுள் கோட்பாடு. இவற்றை முற்றிலும் மறந்த ஒரு இனமாக, எம் இனத்தை அடிமை கொண்டு உலகம் எங்கும் அராபியராலும், ஐரோப்பியராலும் அடிமைகளாக விலையாகிப்போன ஒரு இனம்தான் தமிழ் இனம்.

இந்த வரலாற்று உண்மைகள் எமக்கு மறைக்கப் பட்ட காரணத்தாலும், நாமும் அவற்றை மறந்து விட்ட காரணத்தாலும், மீளவும் ஒரு சுதந்திர இனமாக போராட முற்பட்ட வேளையில் 2009ம் ஆண்டு இரண்டு இலட்சத்துக்கும் அதிகமாக நாம், கொன்று அடக்கப்பட்டுக் கிடக்கிறோம்.

இன்று மீண்டும் மீளா அடிமைத் தளையில் சிங்கள, இந்திய, அமெரிக்க, ஐரோப்பிய அரசுகளின் சுரண்டல் தேசமாக எமது தாயகமான ஈழமும், உயிரும் உணர்வும் பறிக்கப்படும் இனமாக எமது தமிழ் இனம் ஈழத்திலும், புலம் பெயர் தேசங்களிலும் இராணுவ அடக்கு முறைக்குள் தவிக்கிறது.

இன்னமும் இந்திய அமைதிப் படைகளும், இலங்கை அரசுப் படைகளும் செய்த செம்மணி முதல் முள்ளி வாய்க்கால் வரை நடத்தப்பட்ட தமிழினப் படுகொலைகளுக்கான நீதி பற்றிய பேச்சே மூச்சற்றுக் கிடக்கிறது. மன்னாரில் தோண்டத் தோண்ட பெண்கள், சிறுவர், பொது மக்களின் எலும்புக் குவியல்கள் அன்றாடம் வளர்ந்து கொண்டே செல்கிறது. இவற்றுக்கான நீதியை பெறாத வரை எந்த ஒரு ஆன்மீகமும் எவரும் பேச முடியாது.

ஆனால், கடந்த 10 வருட காலமாக ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணைச் சபை கூடிப்பேசியும், தமிழ் இனத்துக்கான எந்தப் பருப்பும் வேகவில்லை. சிங்கள இனத்தின் தமிழின அழிப்பு நடத்திய அரசியல் கட்சிகளின் பங்காளிகள் சண்டையில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற எமது தமிழினத் தலைவர்களே தலையால் கிணறு தோண்டிக் காப்பாற்றிய அதிசய, அக்கிரம, அநியாயம் நடந்தேறியது. அதனால் இப்பொழுது தமிழினம் "ஜனநாயகக் காவலர்" என்ற உலக விருதைப் பெற்று விட்டதாகச் சில புல்லுருவிகள் புளகாங்கிதம் கொள்கின்றனர்.

நாயின் நற்குணத்தைப் பாராட்டிய பழைய பாடல் ஒன்று 'எறிந்த வேல் மெய் இருக்க வாலாட்டும் நாய்' என்ற வரிகள் தமிழ் இனத்தைப் பார்த்துப் பாடிய வரிகளோ? என நினைக்கத் தோன்றுகிறது. தன் உடலில் வேல் தாக்கி வலியில் துடிக்கிற நேரத்திலும், தன்னை வளர்த்த தலைவனைத் தன்வாலை ஆட்டி, மகிழ வைக்கிற நாய்களாக எமது இனம் இருப்பதை நினைத்து அழுவதா...? சிரிப்பதா...?

இதைக் கூட ஆன்மீகம் எனப் பேசி எம் இனத்தை ஆறுதல் செய்ய பல ஆன்மீக வாதிகள் முன்வருவர். அவர்களை "நாய்கள் எனத் தூர விரட்டி விடு பாப்பா...!" என்ற பாரதியின் வரிகள்தான் தேவையாகிறது.

மீண்டும் நலமுடன் சந்திக்க விடை பெறும்,

**ஆசிரியர், அகர தீபம்.**



# அகர தீபம்


மாலை : 05 மலர் : 04

தலைமை
**த. இரவீந்திரன்**

ஆசிரியர்
**ஆதவன்**

உதவி ஆசிரியர்
**வண்ணை தெய்வம்**

ஆசிரியர் குழு
**வியாசன்**

வடிவமைப்பு
**ஈழமயூரன்**

ஒப்பு நோக்குனர்
**திரு.செ. அமுதவாணன்**



தொடர்புகளுக்கு

European Tamils Union e.V.
PO.Box 4153, 59037 Hamm
Germany

**00 49 176 47 11 87 11**

Email : akaratheepam@akaram.eu

**www.akaram.eu**



GERMANY, SWITZERLAND, FRANCE
ENGLAND, DENMARK, NORWAY,
HOLLAND, SWEDEN, ITALY, CANADA



© ETU e.V.2014 All rights reserved

# புங்குடுதீவு கிராஞ்சியம்பதி சிவன் கோவில்

தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புங்குடு தீவில் பெருங்காடு என்னும் இடத்தில் அமைந்துள்ளது இத் திருக்கோவில். இதன் அருகிலே பழமை வாய்ந்த கந்தசாமி கோவில் ஒன்றும் இருக்கின்றது.

இத்திருத்தலம் *1922*ல் ஒரு மடாலயமாகவே தோற்றம் பெற்றது. இதனைத் தோற்றுவித்தவர் இணுவிலைப் பிறப்பிடமாகவும், புங்குடு தீவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையாக் குருக்கள் அவர்களே!. இவர் முன்னர் காலியிலுள்ள சிவன் கோவில்; குருக்களாக இருந்தவர். தர்க்க சாஸ்த்திர வேதங்களிலும், சித்துக்களிலும் வல்லவராக திகழ்ந்தவர். கதிர்காமக் கந்தன் மேல் அதீதபக்தி கொண்ட இவர் புங்குடுதீவில் ஒரு சிவாலயம் அமைக்க வேண்டும் என்னும் பேரவாவால் இவ்வாலயத்தை உருவாக்கினார்.


காலி சிவன் கோவில் குருக்கள் பதவியில் இருந்து விலகி, புங்குடு தீவிற்கு வந்த ஐயர் மனைவியுடனும் மகனுடனும் காசி யாத்திரை சென்றவர் கங்கையில் மூழ்கி எழுந்தபோது இவருக்கு சிவலிங்கம் ஒன்று கிடைத்ததாம்! தனது எண்ணத்திற்கு இறைவன் அருள் புரிந்து விட்டான் என மனம் மகிழ்ந்த ஐயர், உடனடியாக ஊர் திரும்புவதற்காக புறப்பட்டவர், வரும் வழியில் தமிழ்நாட்டில் தேவகோட்டை என்னும் ஊரில் இரண்டு அம்பாள் சிலைகளையும் விலைக்கு வாங்கிக் கொண்டு, புங்குடுதீவு வந்தவர் தனது வீட்டின் மேற்குப் புறமாக இருந்த மடத்தில் வைத்து வழிபட ஆரம்பித்தார்.

சிறிது காலம் அந்த மடத்தையே ஆலயமாக மாற்றி பூசைகள் செய்து வந்த ஐயர், அதற்கு ஒரு ஆலயம் அமைக்கு முயற்சியில் ஈடுபடலானார்! இவரது மாமனாராகிய சிவஸ்ரீ திருஞான சம்மந்தக் குருக்களால் இவருக்கு சீதணமாக வழங்கப்பட்ட



வீட்டினை இடித்து, ஒரு சிறிய கோயிலைக் கட்டி சிவனையும் அம்பாள் விக்கிரகங்களையும் எழுந்தருளச் செய்து வழிபட்டார். ஊரில் உள்ள மக்களும் தங்கள் ஊரில் ஆலயம் வருவதை வரவேற்று, உதவிகள் செய்ததனால் ஆலய பூசைகள் அனைத்தும் சிறப்பாகவே நடைபெற்றன.

ஐயருக்கு நீண்ட நாட்களாக கதிர்காமக் கந்தனை தரிசிக்காமல் இருந்தது பெரும் மனக்குறையாகவே இருந்தது. 1928ம் ஆண்டு கந்தனின் பெருவிழாவினைக் காண வேண்டுமென மனைவி செல்வநாயகி அம்மாவுடன், மகன் மீனாட்சிசுந்ரம் அவர்களையும், அழைத்துக் கொண்டு கதிர்காமம் சென்று விழாவினைக் கண்டு மனம் பூரித்தவர் தீர்த்தத் திருவினை முடிந்ததும் மனைவி, மகனோடு கதிர்காம கந்தனைத் தரிசிக்க வந்திருந்த புங்குடுதீவு மக்கள் பலரையும் அழைத்து தனதருகில் அமர வைத்து, "நான் வந்த காரியம் முடிந்து விட்டது! ஆனால், நான் ஆரம்பித்த



காரியம் முடியவில்லை! நான் ஆரம்பித்த ஆலயப்பணிகளை நீங்கள் எல்லோரும் இணைந்து சிறப்பாக செய்யுங்கள். நான் சமாதியடையப் போகின்றேன்! எனக்கான சமாதிக் கிரிகளைச் செய்வதற்காக பழனியில் இருந்து இருவர் வந்துள்ளார்கள்!" என்று கூறிவிட்டு சமாதியடைந்து விட்டார்!.

(இதுபற்றிய குறிப்பு யாழ் பல்கலைக் கழக நூலகத்தில் 'மேன் மக்கள் சரிதம்" என்னும் நூலின் 107ம் பக்கத்தில் இருப்பதாக அறிய முடிகின்றது.)

கணவரின் வாக்கை வேதவாக்காகக் கொண்ட செல்வநாயகி அம்மா அவர்கள் தனது தமையனாரின் உதவியுடன் கோவில் திருப்பணிகளைச் செய்து நிறைவேற்றியதுடன், மகன் மீனாட்சி சுந்தரத்திற்கு சிவாச்சார முறைகள் அனைத்தையும் கற்பித்து, கோவில் பூசை கருமங்களில் ஈடுபட வைத்தார்.

1933ல் முதன் முறையாக இவ்வாலயத்திற்கு முன்னேஸ்வரம் சிவஸ்ரீ சோமஸ்க் கந்தகுருக்கள் தலைமையில் கும்பாபிசேகம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற திருப்பணிகளால் கோவில் ஓர் புரணமான கட்டமைப்பாக விளங்கியது. சகல பரிவார மூர்த்திகளும் உரிய இடங்களில் பிரதிஸ்ட்டை செய்யப்பட்டன.

1961லும் 1977லும் 2005ம் ஆண்டுகளிலும் நடைபெற்ற கும்பாபிசேகங்கள் யாவும் நயினை நாகபூசணி அம்மன் ஆலயக் குருக்களும் தற்போது ஆலய அறங்காவலாராக இருப்பவராலும் 33 குண்டங்கள் போட்டுச் சிறப்பாகச் செய்யப்பட்டன.

வினாயகர், முருகர், நடராஜர், மகாவிஷ்ணு, பஞ்சலிங்கங்கள், நவக்கிரகங்கள், போன்றவர்கள் பிரதிஸ்ட்டை செய்யப்பட்டு இன்று புரணமான ஒரு சிவாலயமாக அருள் ஒளிபரப்பி எழுந்தருளியுள்ளார் கிராஞ்சியம்பதி இறைவனார்.

தனவந்தர் ஒருவரின் தனிப்பட்ட கொடையால் கோவிலின் ராஜ கோபுரமும், மக்களின் பங்களிப்பால் இறைவர் சன்னதிக்கும், அம்பாள் சன்னதிக்கும் கோபுரங்கள் அமைந்துள்ளன. வாகனங்களும் மற்றும் தேவையான மூலப் பொருட்களும் பக்தர்களின் நன்கொடையினிலேயே பெறப் பட்டதாகும். ஊர் மக்களின் பங்களிப்பாய்க் கிடைத்த நிதியை வைப்பிலிட்டு நித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.



இவ் ஆலயத்தில் பங்குனி உத்திரத்தை தீர்த்தமாகக் கொண்டு பதினொரு நாட்கள் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. சிவவிரதங்களும், நடேசர் அபிசேகங்களும், அம்பாள் விரதங்களும், திருவிளக்குப் பூசை போன்றவைகளும் கிரமமாக சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சமாதியடைந்த இவ் ஆலயத்தினை உருவாக்கிய ஐயர் மேல் பற்றுக் கொண்ட ஊர்மக்கள் அவரை 'வீரமார்க்கண்டு ஐயர்' என அழைத்து, அவர் சமாதியடைந்த தினத்தில் பூசைகள் செய்து வழிபடுகின்றனர்.

'நித்தலும் நியமம் செய்துநீர் மலர்தூவி, சித்தம் ஒன்றவல்லாற் அருளும் சிவன் கோவில்" இதுவென்றால் மிகையாகாது.

# சகலவித எதிர்மறை சக்திகளை விலக செய்யும்

# எருக்கம்பூ...!



தாமாகவே வளரக்கூடிய வெள்ளெருக்கு இருக்கும் இடத்தில் பாம்புகள் வருவதில்லை என்று சொல்லப்படுகிறது. வெள்ளெருக்கு பட்டை மூலம் செய்யப்பட்ட திரியை, விளக்கில் இட்டு தீபம் ஏற்றினால், சகலவித எதிர்மறைகளும் விலகி விடுவதாக ஐதீகம்.

சூரியனுக்குரிய மூலிகையாக கருதப்படும் வெள்ளெருக்கு, சூரிய ஒளியிலுள்ள தண்ணீரை நுட்பமாக கிரகித்து வளரும் தன்மை பெற்றது.

வீட்டில் இருக்கும் வெள்ளெருக்கு விநாயகருக்கு அபிஷேகம் அவசியம் இல்லை. எருக்கம்பூ, அருகம்புல், வன்னி இலை ஆகியவற்றை சூட்டுவதோடு, அத்தர், ஐவ்வாது, புனுகு போன்ற வாசனைப் பொருட்களை பூசி வழிபட்டால், வீட்டில் மகிழ்ச்சியும், மன அமைதியும் உண்டாகும்.

சிவபெருமானுக்கு விருப்பமானது எருக்கம்பூ என்று நாயன்மார்கள் சிலர் போற்றியிருக்கிறார்கள். மேலும், அது தேவ மூலிகை என்றும் சொல்லப்படுகிறது.

வெள்ளெருக்கு விநாயகர் சிலை செய்ய வெள்ளை நிற பூக்கள் கொண்ட எருக்கன் செடிதான் தேர்வு செய்யப்படும்.



# கடவுளுக்கு செய்யும் அபிசேகங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஏன் தெரியுமா...?

நமது பழமையான ஆலயங்களில் உள்ள மூலவர் சிலைகள் அரிய மூலிகைகளால் உருவாக்கப் பட்டதாகும். அவற்றின் அடியில் சக்தி வாய்ந்த மந்திர தகடு(செப்பு) பதித்து இருப்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த மந்திர தகடும், மூலிகையும் அபிசேகம் செய்யும் போது அதிக ஆற்றலை வெளிப்படுத்தும்.

அபிசேக தீர்த்தத்தை நம் மீது தெளித்துக் கொண்டாலும், சிறிதளவு குடித்தாலும் நமக்கு அபரிதமான புத்துணர்சி கிடைப்பது இதனால்தான்.

அபிசேகம் காரணமாக கருவறையில் உள்ள காற்றில் அதிக ஈரப்பதம் இருக்கும். ஈரப்பதத்தில் ஒளி வேகம் அதிகமாக இருக்கும். அதனால்தான் அபிசேகத்தின் போதும் தீபம் காட்டும்போதும் கருவறை காற்று மண்டலம் அயனியாக்கப்பட்ட மூலக்கூறுகளுடன் வெளியில் வருகிறது. அது பக்தர்களுக்கு உள்ளத்தில் பலத்தை ஏற்படுத்துவதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

அபிசேகத்தின் போது “ஓம்” என்று தொடங்கி குருக்கள் சொல்லும் மந்திரம் கற்சிலை மீது பட்டு, வெளியில் அலையாக வரும்போது தெய்வீக ஆற்றலை கொடுக்கிறது. மேலும், அபிசேகம் செய்யப்படும் போது, நேர் அயனியும் எதிர் அயனியும் காற்றில் வந்து பக்தர்கள் உடலுக்குள் சென்று புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறது.

நேர் அயனியை சிவமாகவும், எதிர் அயனியை சக்தியாகவும் நம் முன்னோர்கள் உருவகப்படுத்தி, அபிசேகம் செய்யும்போது சிவசக்தியின் திருவிளையாடல் நடப்பதாக வரையறுத்துள்ளனர்.

இதை கருத்தில் கொண்டே,

# நோய் தீர்க்கும் கோமுக நீர்



ஆலயங்களில் இறைவனின் கருவறையில் இருந்து, அபிசேகம் செய்யப்படும் நீர் வெளியேறும் பகுதியை 'கோமுகம்' என்று அழைப்பார்கள். கோமுகம் வழியாக வெளியேறும் அபிசேக நீரை பலரும், எடுத்துச் செல்வதையும், சிலர் கைகளில் ஏந்தி அருந்தி தலையில் தடவிக் கொள்வதையும் நாம் பார்த்திருப்போம்.

ஒரு சிலர் அது ஏதோ அசுத்தமான நீர் என்று நினைத்து அதை கண்டுகொள்ளாமல் செல்வதையும் பார்த்திருக்கலாம். இறைவனின் மீது பட்டு கோமுகம் வழியாக வெளியேறும் நீர், கங்கையை விட புனிதமானது என்று சொல்லப்படுகிறது.

பரணி அல்லது மகம் நட்சத்திரத்தன்று இறைவனை அபிசேகித்து வெளியேறும் நீரை, பாட்டிலில் பிடித்து வீட்டில் வைப்பது நல்லது என்கிறார்கள். அந்த அபிசேக நீரை அருந்துவதால் நோய்கள் விலகும் என்பதும் ஐதீகமாக உள்ளது

ஆலயத்தில் எப்போதும் தெய்வீக ஆற்றல் நிரம்பி இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நம் முன்னோர்கள் கருவறையில் இருந்து அபிஷேக திரவியங்கள் நேராக கோவில் திருக்குளத்தை சென்றடைய ஏற்பாடு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு மூல மூர்த்திக்கும் ஒவ்வொருவித அபிசேகம் மிகவும் உகந்தது. அதற்கு ஏற்ப பலன்கள் கிடைக்கும். பொதுவாக பாலாபிசேகம் செய்வதை பெரும்பாலான பக்தர்கள் விரும்பி செய்வதுண்டு எல்லா கடவுளுக்கும் பாலாபிசேகம் அடிக்கடி நடைபெறும்.

குறிப்பாக பிரதோச காலத்தில் நந்திக்கு செய்யப்படும் பல்வேறு அபிசேகங்களில், பால் அபிசேகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. அபிசேகத்துக்கு கொண்டு செல்லும் பாலை, கோவிலை ஒரு தடவை சுற்றி விட்டு கொடுத்தால் இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.






# கன்னிகா தானம்

வயிற்றுப் பசியைப் போக்குகிற அன்னதானமே சிறந்தது என்று சொல்வார்கள். நிதானமே சிறந்தது என்பவர்களும் உண்டு. ஆனால், தானங்களிலேயே மிகப் பெரியதாக, மகாதானமாக சாஸ்திரம் குறிப்பிடுவது கன்னிகா தானத்தைதான்!

திருமணம் செய்து வைக்கும் போது, தந்தையானவர் தான் பெற்ற பெண்ணை மற்றொரு குடும்பத்தில் பிறந்த ஆண்மகனுக்குத் தானமாக அளித்து, அவனிடம் ஒப்படைக்கும் இந்த நிகழ்வையே கன்யாதானம் அல்லது கன்னிகாதானம் என்கிறார்கள்!

இந்த உலகில் பலவித தானங்கள் செய்யப்பட்டாலும், அவை எல்லாவற்றிலும் உயர்ந்தது இந்த கன்னிகாதானமே என்பதற்கு இந்த நிகழ்வின் போது சொல்லப்படுகிற சங்கல்பமும், மந்திரமுமே சாட்சி.

அதாவது, “கன்யாதானம் செய்பவனுக்கு முன்னால் உள்ள பத்து தலைமுறையும், பின்னால் வருகிற பத்து தலைமுறையும், கன்யாதானம் செய்பவனது தலைமுறையையும் சேர்த்து ஆகமொத்தம் இருபத்தியோரு தலைமுறைகளையும் கரைசேர்க்கும் விதமாக இந்த கன்னிகாதானம் என்று அழைக்கப்படுகின்ற மகாதானத்தைச் செய்கிறேன்” என்பது இந்த மந்திரத்தின் பொருள்.

“உன் வம்சவிருத்திக்காக எம் குலவிளக்கை உனக்கு தானமாக அளிக்கிறேன்” என்று ஒரு தந்தை செய்யக்கூடிய கன்னிகாதானமே உலகில் அளிக்கப்படுகின்ற தானங்களில் மிகப்பெரியது என்று சாஸ்திரம் போற்றுகிறது.

ஆண்பிள்ளையைப் பெற்றால் அந்தப் பிள்ளை செய்கிற கர்மாவின் மூலம் அந்த ஒரு தலைமுறை மட்டுமே கரையேறும்.


ஆனால், பெண் பிள்ளையைப் பெற்று, அவளைக் கண்ணுக்குக்

கண்ணாக வளர்த்து, மற்றொருவனின் வம்சவிருத்திக்காக அவளை தானம் செய்து கொடுப்பதால், அவனது வம்சத்தில் 21 தலைமுறைகளும் கரையேறுகிறது என்றால் பெண் பிள்ளையைப் பெற்றவன் எப்பேற்ப் பட்ட புண்ணியம் செய்தவன் எனச் சிலாகிக்கிறார்கள் சான்றோர்கள்!

ஆக, பெண்பிள்ளையைப் பெற்றவன், இருபத்தியோரு தலைமுறையைக் கரையேற்றும் வாய்ப்பைப் பெற்றவன் என சாஸ்திரம் சொல்கிறது... மகளை பெற்ற என் நண்பர்களுக்குச் சமர்ப்பணம்

## திருமணம் முடிந்த பின் ஏன் பாலும், பழமும் கொடுக்கறாங்க தெரியுமா..? பிரம்மிப்பூட்டும் இரகசியம்..!!

“பெண்ணானவள் தான் பிறந்து,



வளர்ந்த குடும்பத்தை விட்டு புதிய சூழலில் வாழ வருவதால் எல்லாமே புதிதாக இருக்கும்.

கணவர் வீட்டார் கூறும் வார்த்தைகளில் தவறாக புரிதல் வரும், அதிலும் கேலி, கிண்டல் ஏன் சில நேரம் அதட்டல் என ஏற்படலாம்.

அந்த நேரங்களில் பெண்ணே ஒருபசு மாடு எப்படி விசத்தையே உண்டாலும், அது தரும் பாலில் துளிகூட விசம் இராதோ, அது போல கணவன் வீட்டார் உனக்குத் தீமையே செய்தாலும் விசம் போன்ற வார்த்தைகளை கொட்டி விடாதே!” என குறிக்க பாலும்.

“வாழைபழம் எப்படி விதையே இல்லாவிட்டாலும் மூலமரத்தைச் சார்ந்து கன்றை தருகிறதோ, அது போல் கணவனைச் சார்ந்து வம்சவிருத்தியை நீ தரவேணும்” எனக் குறிக்க பழமும் தருவர்.


## மணமகனுக்கு ஏன் தருகிறார்கள் என்றால்...?

“ஏ! மணமகனே பாலில் எப்படி தயிரும் நெய்யும் உள்ளதோ, அதுபோல் இந்த பெண்ணிடமும் அறிவும், ஆற்றலும் உள்ளது. பக்குவமாக உறையிட்டு, பக்குவமாக கடைந்து வெண்ணையை, நெய்யை எடுப்பாயாக! பாலை கெட வைத்துவிடாதே!!” எனக் குறிக்க பாலும்.

“வாழைமரத்தை எப்படி அதன் தாய் மரத்தில் இருந்து பக்குவமாக பிரித்து நடுவரோ அது போல், இந்த பெண்ணை உங்கள் குடும்ப தோட்டத்தில் நட்டுள்ளோம். அதை பட்டுபோக விடாமல், அதை பக்குவமாக கவனித்து, அதிலிருந்து உங்கள் சந்ததிகளை வாழையடி வாழையாக விருத்தி செய்து கொள்ளுங்கள்!!” என உணர்த்தவே பழமும் கொடுக்கிறார்கள்.

திருமணத்தில் பால் பழம் கொடுப்பது சும்மா ஒரு வேடிக்கையான செயல் அல்ல.

# அற்புதங்களை நிகழ்த்தும் அனுமன் விரதம்



மகாவிஸ்ணு, ராமனாக அவதரித்த போது, அவருக்கு உதவி செய்தவர்கள் பலர். அப்படி உதவி செய்தவர்களில் முதன்மையானவராக இருந்து, ராமனுடனேயே தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டவர் அனுமன். அவரது பிறப்பும், வாழ்வும், ராமன் மீது கொண்டிருந்த அளவற்ற பக்தியுமே அவரை வழிபாட்டுக்கு உரியவராக மாற்றின.

'ஹனுமான்' என்ற வடமொழிப் பெயரில்,'ஹனு' என்பது 'தாடை' என்றும், 'மன்' என்பது 'பெரியது' என்றும் பொருள்படும். தாடை பெரிதான தோற்றம் கொண்டவர் என்பதால் 'ஹனுமான்' என்று அழைக்கப்பட்டார். அந்தப்

பெயரில் தமிழ் வடிவமே 'அனுமன்.' வானர வம்சத்தைச் சேர்ந்தவர் என்பதால் 'மாருதி' என்றும், அஞ்சனை-கேசரி மகன் என்பதால் 'ஆஞ்சநேயர்' என்றும் பெயர் பெற்றார்.

ராமாவதாரம் எடுத்த மகாவிஷ்ணுவுக்கு, அனைத்து ஜீவராசிகளும் தங்களால் இயன்ற உதவிகளை செய்வதைப் பார்த்த சிவபெருமான், தன் பங்குக்கும் ஏதாவது செய்ய நினைத்தார். அதன்படி தன்னுடைய சக்தியை எடுத்துச் சென்று ஒரு பெண்ணிடம் தருமாறு வாயு தேவனை பணித்தார். அந்த நேரத்தில் தான் அஞ்சனை தனக்கு பார் போற்றும் மைந்தன் வேண்டும் என்று இறைவனை நினைத்து தவம் செய்தாள். அவளிடம் அந்த சக்தியைச் சேர்த்தார் வாயுதேவன். அதன்படி சிவபெருமானின் சக்தியாக அவதரித்தவரே ஆஞ்சநேயர் என்ற கூற்று ஒன்று உள்ளது.

மகாபாரதத்தில் வரும் அர்ச்சுனன்- கிருஷ்ணனின் நட்பைப் போன்றது, ராமாயணத்தில் வரும் அனுமன்- ராமரின் நட்பு. ராமரின் மூலமாக வாலிக்கும் சுக்ரீவனுக்கும் இருந்த பகையை முடிவுக்குக் கொண்டு வந்தார். இலங்கையில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையை கண்டு வந்து, ராமருக்கு ஆறுதல் அளித்தார். அசோக வனத்தில் இருந்த சீதையால் "சிரஞ்சீவியாக இருப்பாய்" என்று ஆசீர்வதிக்கப் பட்டவர் அனுமன்.

ராவணனுடனான யுத்தத்தில் இந்திரஜித் செலுத்தி அம்பு பட்டு மூர்ச்சையான லட்சுமணனை காப்பாற்றுவதற்காக சஞ்சீவி மலையை பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்தார். 14 ஆண்டுகள் வனவாசம் முடிந்து ராமர் வர தாமதமானதால், தீக்குளிக்கச் சென்ற பரதனை காற்றை விட வேகமாக சென்று, தடுத்து நிறுத்தி காப்பாற்றினார். ராமாயணம் முடிந்து மகாபாரத காலம் வந்தது. அப்போது நடந்த குருசேத்திர யுத்தத்தில் கிருஷ்ணர் ஓட்டிய தேரின் மேல் கொடியாக இருந்து, அனைத்து பாரங்களையும் தாங்கிக்கொண்டிருந்தவர் அனுமன்.

இப்படி பல பெருமைகளைக் கொண்ட அனுமனை, மகாவிஷ்ணு தனது வாகனமான கருடனுக்கு அடுத்த நிலையில் வைத்திருந்தார். அதனால் இவரை மகாவிஷ்ணுவின் சிறிய திருவடியாக கூறுவர். அதே சமயம் கருடாழ்வாருக்கு கிடைக்காத ஒரு பெருமையும் அனுமனுக்கு கிடைத்தது. அதாவது பெரிய திருவடியான கருடனுக்கு இல்லாத அளவில் தனிக் கோவில்கள் அனுமனுக்கு பல அமைந்திருக்கின்றன.





அனுமன் வழிபாடும், அவருக்கு தனி கோவில்கள் எழுப்புவதும் கிருஷ்ணதேவராயர் காலத்தில் இருந்து தொடங்கியதாக வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அனுமனுக்கான ஆலயங்களில் வீரக் கோலம், நின்ற கோலம், யோகக் கோலம் என மூன்று நிலைகளில் அனுமன் அருள்பாலிப்பார். அனுமன் 'சிரஞ்சீவி' என்ற பட்டத்தைக் கொண்ட எழுவரில் ஒருவர்.

அனுமனை வழிபாடு செய்தால், திருமால், சிவன், ருத்ரன், பிரம்மா, இந்திரன், கருடாழ்வார் ஆகியோரை வழிபட்ட பலன் கிடைக்கும். அவரது வாலில் நவக்கிரகங்கள் ஐக்கியமாகி இருப்பதால், அவரை வழிபடுவோருக்கு நவக்கிரகங்களால் பாதிப்பு ஏற்படாது. அனுமன் வழிபாட்டினால் அறிவு கூர்மையாகும், உடல் வலிமை பெருகும். மனஉறுதி ஏற்படும். அச்சம் அகலும். நோய் நொடிகள் விலகும். தெளிவு உண்டாகும். வாக்கு வன்மை அதிகரிக்கும்.

உடல் மனநலம் குன்றியவர்கள், திருமணம் ஆகாதவர்கள், குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள், தொழில் நஷ்டம் அடைந்தவர்கள், பில்லி, சூனியம், ஏவலால் பாதிக்கப் பட்டவர்கள், ஊழ்வினையால் துன்புறுகிறவர்கள் அனுமனுக்கு வெற்றிலை மாலை, வடை மாலை, எலுமிச்சைப்பழ மாலை, துளசி மாலை சாத்தி வழிபட்டால் மேன்மை பெறுவார்கள். வெண்ணெய் சாத்தி வழிபட்டால், நம் துன்பங்கள் அனைத்தும் வெப்பம் பட்ட வெண்ணெய் போல கரைந்து போகும் என்பது நம்பிக்கை.


## ஆலயங்களுக்கான அறிவித்தல்!



'அகரதீபம்' இதழை பெற்றுக் கொள்வதற்கும்,
ஆலயங்களுக்கான விளம்பரங்களைப்
பிரசுரிக்கவும் எம்மோடு தொடர்பு கொள்ளவும்

தொடர்புகளுக்கு

**00 49 176 47 11 87 11**

# விருட்சங்கள் உணர்த்தும் தெய்வீக பலன்



**ருத்ராட்ச மரம் :** இம்மரம் சிவனின் அம்சமாக கருதப்படுவதுடன், ருத்ராட்ச கொட்டையை உடலில் அணிந்துகொண்டால் இரத்த அழுத்தம் சீராகவும் கோபம் குறையும் எனவும் கூறப்பட்டுள்ளது.

**ஷர்ப்பகந்தி :** இம்மரத்தின் அருகில் பாம்புகள் நெருங்காது. இதன் காரமாணக இம்மரக்குச்சிகளை உடலில் கட்டிக்கொண்டால் பாம்புகள் தீண்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெல்லி மரம் :** விஸ்ணுவின் அம்சமான இந்த மரத்தின் அதிர்வுகள் சாத்வீக குணமிக்கவையாக காணப்படுவதுடன், இந்த மரத்தின் கீழ் தம்பதிகளை அமரவைத்து அன்னதானம் வழங்கினால், அன்னதானம் வழங்குபவரின் கர்மவினைகள் தீரும்.



**வில்வ மரம் :** வில்வமரம் சிவனின் அம்சமாக கருதப்படுவதால், இம்மரத்தின் இலைகளை கொண்டு சிவனை வழிபட்டால் பாவங்கள் நீங்கும்

**காட்டு மரம் :** பிரம்மாவின் அம்சமாக கருதப்படும் இம்மரம் சாத்வீக அதிர்வுகளை வெளிப்படுத்தும்.

**துளசி :** விஷ்ணுவின் அம்சமாக கருதப்படுகின்ற இம்மரம் பிருந்தாவனம் எனவும் அழைக்கப் படுகின்றது. பிருந்தாவனத்தில் விஷ்ணு குடியிருப்பதால் வீடுகளின் முற்றத்தில் துளசி மாடம் அமைக்கப்படுகின்றது. அத்தோடு துளசிக்கு மருத்துவ குணங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



**புளிய மரம் :** புளிய மரம் தீய அதிர்வுகளை வெளிப்படுத்தும் என்பதுடன் நோய்களை உருவாக்கும் வல்லமை கொண்டது.

## அறிவோம் ஆன்மீகம்

**பாகம்- 16**

ஆன்மீக போதனைக்கு சொற்களை கதைகள், விடு கதைகள் புனை கதைகளாக மக்களிடம் முதன் முதலில் அறிமுகம் செய்து வைத்தவர் கௌதம புத்தரே!. அத்தகைய போதனைக் கதைகளை புத்த ஜாதகக் கதைகள் என்பர்.

அந்தக் கதைகளில் மக்களிடம் ஏற்கனவே அறிமுகமான செய்திகளும் இடம் பெற்றதால் அவை மக்களின் மனங்களில் விரைவாக, இலகுவாக உள்வாங்கப்பட்டு விட்டன.

உதாரணமாக, அவருடைய ஒரு கதையில் அவர் காலத்துக்கு பல நூறு வருடங்களுக்கு முன்பிருந்த தமிழ் கடல் வணிகர்கள், தமது கப்பல்களில் பழக்கப்பட்ட காகங்களைத் தம்மோடு எடுத்துச் செல்வர்.

கடலில் திசைமாறி போகும் பொழுதும், வழி தெரியாமல் தவிக்கும் பொழுதும் ஒரு காகத்தை வெளியே பறக்கவிட்டு, அது கப்பலுக்குத் திரும்பி விட்டால் கரை அருகில் இல்லை என்பதை அறிந்து கொள்வர். அப்படி கடலில் இருந்து கரைக்கு வந்த காகத்தை தொடர்ந்து, கப்பல் ஒன்று கரைக்கு வந்ததைக் கண்ட தமிழ் புலவர் 'காகம் கரைந்தால் விருந்தினர் வருவர்" எனக் குறித்து பாடல் ஒன்றைப் பாடினார்.

அந்தப் பாடலைப் பாடிய புலவர் பெயர் தெரியாத காரணத்தால் அந்தப் புலவர் காக்கைப் பாடினியார் என இன்று வரை அழைக்கப்படுகிறார். நாமும் காகம் கரைந்தால் விருந்தாளி வருவார் என இன்றும் நம்புகிறோம், பேசியும் வருகிறோம். இந்த உண்மையை வரலாறாக இப்பொழுது யூரியூப்காணொளி மூலம் அறியத் தந்திருப்பவர் ஒரிசா பாலு எனப்படும் பால சுப்பிரமணியம் என்கிற கடலடி மற்றும் தமிழ் மொழி ஆய்வாளர் ஆவார். குமரிக் கண்டம் மற்றும் தமிழரது வரலாறு பற்றி விஞ்ஞான ரீதியாக நிரூபித்து வரும் இவரை, தமிழ்மக்கள் கட்டாயம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

புத்தர் தமது கதையில் சீடருக்கு போதிக்கும் பொழுது, முற்காலத்தில் கப்பலில் வருவோர் காகத்தை அனுப்பி கரையை அறிவது போல நானும், எனது

# ஆன்மீகத்தில் சொல்லும், பொருளும்!





போதனைகள் மூலம் சீடர்களை அறிந்து கொள்கிறேன் என்றாராம். இதனை வரலாற்று ரீதியாக ஈரானில் கண்டெடுத்த பழைய முத்திரையில் கப்பலும், அதில் ஒரு மனிதனின் கரங்களில் ஒரு காகமும் இருந்ததைக் கண்டு, அவற்றை சிந்து வெளி வணிகர்களின் முத்திரையாக இருக்க வேண்டும் என முடிவு செய்தனர்.


இப்படி உண்மைச் சம்பவங்களை மக்களுக்கு நினைவு படுத்தி புத்தர் மக்களின் மனங்களில் தமது கருத்துகளை விதைத்தார். ஆனால் சைவ, வைணவ மதப் பிரசங்கிகள் முற்றிலும் பொய்யான கற்பனைகளைச் சொல்லி, மக்களை நம்ப வைத்து தமது மதங்களை பரப்பினார்கள். மக்களிடம் பாவங்களைச் சொல்லி, அவற்றால் ஏற்படும் பாவம், புண்ணியம், சொர்க்கம், நரகம் என்ற பயங்கரக் கற்பனைகள் மூலம் தங்களை பரிசுத்தர்களாகவும் மூளைச் சலவை செய்து, தமது அடியார்கள், தொண்டர்கள் எனப் போதனைகள் செய்து தமது ஆதரவைப் பெருக்கினர்.

அவர்களின் கதைகளைக் கேட்பவர் எல்லாம் பாவிகளாகவும், நரகத்தில் கிடைக்கப் போகும் பயங்கரமான கொடூரமான தண்டனைகள் அவற்றால் பாவிகள் எழுப்பும் அவலக் குரல்களைப் பற்றிச் சொல்லி, நிரந்தரமான பாவிகளாக நம்ப வைத்தனர். இந்த மனப் பிராந்தியை அவர்கள் பய பக்தி என்ற தெய்வீகச் சொற்களால் புனிதப்படுத்தி, அவைதான் தேவ வாக்காக அல்லது வேத வாக்காக கூறி, அவற்றுக்கு நிவாரணமாக பல்வேறு கடவுளர்களை ஏற்படுத்தும் புராணக் கதைகளை கற்பனையாக போதித்தும், அவற்றுக்கான கோயில்களை கட்டச் செய்தும் பூசைகள், சடங்குகள் விழாக்கள் சம்பிரதாயங்களை நடத்த வைத்தனர்.

அப்பாவி மக்களின் உழைப்புகளையும், சொத்துக்களையும், வேள்விகள், யாகங்கள் எனத் தீயிலிட்டுப் பொசுக்கியும், மக்களை நிரந்தர ஏழைகளாக்கி, தாங்களே சகல சுகங்களையும் அனுபவிக்கும் புண்ணிய சீலர்களாக வாழ பழகிக் கொண்டனர். இத்தகைய வாழ்வியலை நிரந்தரம் ஆக்கிக் கொள்ள மனு தர்ம சாத்திரம் என்ற நூலை இயற்றி, தங்களை பிரமனின் தலையில் பிறந்த உயர் சாதிப் பிராமணர் எனவும், கடவுளோடு பேசவும், அவருக்குப் பூசை செய்யவும், அவர்களது ஆரிய மொழியான சமஸ்கிருதமே சிறந்தது எனவும், அரசர்களையும் நம்ப வைத்தனர்.

நாட்டை ஆட்சி செய்யும் அரசர்களே 2வது உயர் சாதி எனவும், 3வதாக வியாபாரத்தின் மூலம் அதிக பண வருவாயைக் கொண்ட வணிகரை வைத்தும், இவர்களுக்கு எல்லாம் தேவையான வேலைகளைச் செய்து கொடுக்கும் அடிமை மக்கள் கூட்டமாக பொது மக்களை வைத்தும், இந்த மன தர்மம் உருவாக்கியது.

இந்நூலின் போதனைகளில் எந்த இடத்திலும் மனுசத் தன்மையோ, தர்ம நீதி நியாயங்களோ காணமுடியாது. மாறாக இது முழுக்க முழுக்க வந்தேறி வேடுவக் கூட்டங்களான அந்நிய தேசத்து உயர்ந்த வெள்ளை நிறங் கொண்ட பொதுவாக ஆரியர் என அழைக்கப் பட்டவர்களே, இந்தப் பிராமணர்கள் ஆவர். கால ஓட்டத்தில் இவர்கள் கலப்பு நிறமும்,



சுகிசிவம்



கம்பவாரிதி

குள்ள உருவம் கொண்டிருந்தாலும் இவர்கள் எந்த வகையிலும் சூத்திரர் எனப்படும் சாமனிய மக்களோடு சேர்ந்து சமத்துவ நோக்கும், இலட்சியமும் கொள்கையும் கொண்டவர்களாக இருப்பதில்லை.

இவர்கள் எப்பொழுதும் அரசர்களோடும், அரச அதிகாரிகளோடும், பண பலம் கொண்ட உயர் தட்டு மக்களோடு மட்டுமே பழக்கம் கொண்டு, அவர்கள் பலமான சமுதாயத்தின் சகல வசதிகளையும், சம்பத்துகளையும் சுலபமாகப் பெற்று விடும் இயல்பை கொண்டிருப்பர். இதற்கு இன்றும் காட்சியாகவும், சாட்சியாகவும் இருப்பவர் இந்தியாவின் ஆதிசங்கர மடத்தின் தலைவர்

அதனால்தான் 3,500 வருடங்களுக்கு முன்னர் இந்தியப் பெருநிலப் பரப்புக்குள் வேடுவர்களாக வந்த இவர்கள் இன்றும் கூட அரசர்களையும், அரச அதிகாரிகளையும், அரச படைகளையும், பணக்காரர்களையும் தமது சொற்படி நடக்க வைக்கும் ஆற்றலை தம் வசம் கொண்டுள்ளனர். இத்தனைக்கும் இந்த மனுதர்ம சாத்திரம் ஒன்றுதான் காரணமாகும்.

மகா பாரதப் போர் தமிழ் நாட்டிலே குறவர் எனப்படும் மலைவாழ் மக்களுக்கும், பாண்டியர் எனப்படும் மருத நில விவசாய மக்களுக்கும் இடையில் நடந்த போர் என இலக்கிய மற்றும் ஆதிச்ச நல்லூர் அகழாய்வு முடிவுகள் உறுதிப் படுத்துகின்றன. இரு நிலப் பரப்புகளுக்கும் இடையில் நெய்தல் நிலத்தின் ஆயர்கள் தலைவனான கிருஸ்ணன் இருதரப்புக்கும் இடையில் பொதுவான நடுநிலை வாதி போன்று அமைதியை நிலைநாட்ட முயல்வதாக பாரதக் கதை கூறுகிறது.

தெற்கே நடந்த உண்மைப் போரை வடக்கே நடந்ததாக கதைக் களம் அமைத்து, ஆரியரின் அரசியல் நூலான மனுதர்ம நூலின் தத்துவங்களை கிருஸ்ணன் அருச்சுணனுக்கு ஆன்மீக போதனை செய்வது போல 'பகவத் கீதை" என்ற நூலை உட்புகுத்தியது ஆரிய பிராமணியம்.

இத்தகைய சதிகள் நிறைந்த ஆரிய மேலாதிக்க தத்துவத்தை ஆன்மீகம் என சூத்திரர்களான தமிழ் மக்களுக்கு, சூத்திரர்களான சுகிசிவம், கம்பவாரிதி போன்ற கறுப்பாடுகள் ஆன்மீக போதனை நடத்தும் அவலம் தொடருகிறது. இவற்றை ஆதாரப் பூர்வமாகப் பல காணொளிப் பதிவுகளை தமிழிலும், ஆங்கிலத்திலும் தமிழர் சிந்தனையாளர் பேரவை என்கிற அமைப்பு பதிவு செய்து வெளியிட்டு வருகிறது. இவற்றைப் பார்ப்பதன் மூலம் நாம் எமது உண்மையான ஆன்மீகம் எவை எனத் தெரிந்து கொள்ள முடியும்.

இன்று புலத்தில் தமிழ்மொழிக்கும், தமிழ் இனத்தின் பெருமைகளுக்கும் ஏற்ற பெருமைகளை வழங்க முன்வராமல் சமஸ்கிருதத்துக்கும், பிராமணியச் சிந்தனைகளுக்கும் முக்கியம் கொடுத்து வரும் ஆலய நிர்வாகங்களையே காண்கிறோம். தமிழ் மக்களிடையே சாதிப் பிரிவினைகள் அழிந்து விடாமல், தமிழ் இனத்தைப் படுகுழியில் தள்ள முயலும் பிராமணிய மேலாண்மை அமைப்புகளை தமிழ் மக்கள் ஊக்குவிக்காமல், இழந்து விட்ட தமிழ் இன தன்மானத்தை வளர்த்தெடுத்து, ஆதரிக்க வேண்டும் என்பதே தமிழரின் ஆன்மீகமாக புத்தெழுச்சி பெற வேண்டும்.

# அகந்தை ஆத்திரம் கர்வத்தை வென்றவனே சிறந்தவன்

முன்னொரு காலத்தில் அஷ்தகா என்றொரு முனிவர் இருந்தார். அவர் விஸ்வாமித்திர முனிவரின் புதல்வர். மெத்த ஞானம் பெற்றவர், ஆனால் கர்வம் கொண்டவர். அவருக்கு உடன் பிறந்தோர் மூவர் உண்டு. அவர்களில் ஒருவர் சிபி சக்ரவர்த்தியாவர்.

ஒரு முறை அஷ்தகா ஒரு பெரிய யாகம் செய்தார். பலரையும் அதற்கு அழைத்து இருந்தார். அதில் நாரத முனிவரும் வந்து

கலந்து கொண்டு இருந்தார். யாகம் முடிந்தது. தன்னுடைய செல்வாக்கு எந்த அளவு பரந்து விரிந்து உள்ளது என்பதை நாரத முனிவருக்கும், தமது மற்ற சகோதரர்களுக்கும் காட்ட வேண்டும் என எண்ணிய அஷ்தகா இந்திரனிடம், தாம் தம் நாட்டை சுற்றி வர புஷ்பக விமானத்தை அனுப்புமாறு கேட்டுப் பெற்று, அதில் நாரதரையும், தமது மற்ற சகோதரர்களையும் ஏற்றிக் கொண்டு வானில் பறந்தார்.

வழியில் அஷ்தகா நாரதரிடம், புஷ்பக விமானத்தில் ஏறிக் கொண்டு வந்துள்ள நான்கு சகோதரர்களில் சிறந்தவர் யார்? என்பதை வரிசை கிரமமாகக் கூறுமாறு கேட்டுக் கொண்டார். நாரதர் கூறினார். "நிறைய தான தருமங்கள் செய்து வந்தாலும், வரிசையில் நான்காவதாக சிறந்தவர் அஷ்தகா என்கின்ற நீதான். காரணம், ஒரு முறை நான் உனது ஆசிரமத்திற்கு வந்தபோது, பல விதமான பசுக்கள் அங்கு இருந்தன. அவை அனைத்தும் எப்படி பலரிடம் உள்ளது எனக் கேட்டேன். அவற்றை நான்தான்



தானமாகக் கொடுத்தேன் என்றாய். அப்போது உன் அகந்தையே உன்னை மிஞ்சி நின்றது. ஆகவே மனதில் உன்னை அறியாமலேயே அகந்தை பெற்றுள்ள உனக்கு முதல் இடம் அல்ல.

அடுத்து, உனக்கு முன்னால் மூன்றாம் இடத்தில் உள்ளவர் உன் பெரிய சகோதரர். அவர் ஒரு முறை என்னை தேரில் ஏற்றிக் கொண்டு சென்றார். அப்போது வழியில் அவரைக் கண்ட பிராமணர்கள் அவரிடம் யாசகம் கேட்டு தேரை



ஓட்டிச் சென்ற நான்கு குதிரைகளில் மூன்றை தானமாகப் பெற்றுச் சென்று விட்டனர்.

ஆனால் நான்காம் முறையாக இன்னொரு பிராமணர் வந்து நான்காவது குதிரையை யாசகம் கேட்டு பெற்றுச் சென்றதும், அந்த தேரை அவரே இழுத்துக் கொண்டு சென்றாலும், வழி முழுவதும் அந்த பிராமணரை மனதில் திட்டிக் கொண்டே சென்றார். ஆகவே, அவரும் நிறைய தான தருமங்கள் செய்து வந்தாலும், மனதில் ஆத்திரத்தை வளர்த்துக் கொண்ட அவர் உங்களுக்குள் மூன்றாம் இடத்தில் இருக்கிறார்.

அடுத்து உன்னுடைய இளைய சகோதரர் பலரை தன்னுடைய அரண்மனைக்கு வரவழைத்து, தாம் பயன்படுத்தும் அற்புதமான தமது தேரைக் காட்ட, அனைவரும் அதை வெகுவாகப் புகழத் துவங்க, அவர் மனதில் கர்வம் அடைந்தார். அதை எதிர்பார்த்து நின்றது போலவே இருந்தது அவர் செய்கை. அதனால்தான் அவரும் நிறைய தான தருமங்கள் செய்து வந்தாலும், அவருக்கு முதல் இடம் இல்லை.

உன்னுடைய கடைசி தம்பியான சிபியோ மாய உருவை எடுத்து வந்த பிரும்மன் என்பதைத் தெரிந்து கொள்ளாமல், அவர் கேட்ட அனைத்தையுமே, தன்னுடைய மகனின்; உடலைக் கூடத் தயங்காமல் வெட்டித் தந்தும், அதையே அவர் அவனை உண்ணச் சொன்ன போது தயங்காமல், அவருக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்ற, அதையும் செய்யத் துணிந்தவனை பிரும்மா தோன்றிப் பாராட்டி விட்டுச் சென்றாரே! அவனே தன்னலமற்றவன், போற்றுதலுக்கு உரியவன், உங்கள் அனைவரையும் விடச் சிறந்தவன் என்றார். அஷ்தகாவும் மற்ற சகோதரர்களும் அவமானத்தினால் தலை குனிந்து கொண்டனர்.

## அரியும் சிவனும் ஒன்றே!!!

## அறிந்தால் வாழ்வும் நன்றே..

**"தங்கம் ஒன்று ரூபன் வேறு**
**தன்மையான வாறு போல்**
**செங்கன் மாலும் ஈசனும்**
**சிறந்திருந்ததும்முளே - விங்களங்கள்**
**பேசுவோர் விளங்குகின்ற மாந்தரே**
**எங்குமாகி நின்ற நாமம் இந்த நாமமே."**

வாசலில் கால் பதித்து "கண்ணா வா! வா!!" என்று அம்மா கூப்பிடும் நவரச பண்டிகை....!!! கிருஷ்ணனும், குழந்தையும் விளையாடினால் அன்று முழுவதும் கோலகல பண்டிகை..!!! கோகுலாஷ்டமி என்றும் சொல்லுவார்கள்....

கிருஷ்ண ஜெயந்தியன்று தன்னை அழைக்கும் பக்தர்களின் வீட்டிற்கு கண்ணன் வருவார் என்பது பக்தர்களின் நம்பிக்கை, எனவே கிருஷ்ண ஜெயந்தியன்று, வீட்டைச் சுத்தப்படுத்தி, அலங்கரித்து, குழந்தை கண்ணனை வர வேற்கும் விதத்தில், வீட்டு வாசலில் இருந்து பூஜை அறை வரையில், சின்னக் கண்ணன் நடந்து வருவது போல், அவனது பாதச்சுவடுகளை ஸ்ரீ கிருஷ்ணபாதம் கூறிக்கொண்டே மாக்கோலமிட்டு வரவேற்கலாம்.

இதனால், கண்ணனே நேரில் நம் வீட்டுக்கு எழுந்தருள்வதாக ஐதீகம். ஆயர்பாடியில் கண்ணனை வரவேற்க சித்திரகோலம் (ரங்கோலி), மலர் அலங்காரம், பூக்கோலம் இடுவர். அதை நமது இல்லங்களிலும் செய்து கிருஷ்ணரை வரவேற்க வேண்டும். இதனால் கண்ணனே தன் திருப்பாதங்களைப் பதித்து நடந்து வந்து, பூஜை அறையில் நாம் வைத்துள்ள நைவேத்திய பட்சணங்களை ஏற்றுக் கொள்கிறார் என்பதாகும்

பலன்: கிருஷ்ண ஜெயந்தியன்று பிள்ளை பேறு இல்லாதவர்கள் ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள தசம ஸ்காந்தம் படித்து பாராயணம் செய்தால், அழகான ஆண் குழந்தை பிறக்கும் என்னும் நம்பிக்கை இன்றும் உள்ளது. கிருஷ்ண ஜென்ம பூமியான மதுரா வாழ் மக்கள், அன்று இரவு முழுவதும் கண் விழித்திருந்து, பூஜை செய்வார்கள். யமுனை நதியின் ஒரு கரையில் மதுராவும், மறுகரையில் கோகுலமும் அமைத்துள்ளது. அதனால், அன்று யமுனைக்கு ஆரத்தி காட்டி பூஜை செய்வார்கள்.

குழந்தைகளைக் கொண்டாடுங்கள்... குழந்தைகளோடு பேசுங்கள்...! குழந்தைகளுக்காக நேரம் ஒதுக்குங்கள்...! ஏனெனில் குழந்தைகளே நம் சொத்து.. அவர்களே நம் எதிர்காலம்...! குழந்தைகளே நம்மை எதிர்காலத்தில் காக்கும் கடவுள்".... இவற்றை



# கிருஷ்ண ஜெயந்தி வழிபாடல்ல...! வாழ்வியல் முறை...!



## எதிர்மறை சக்திகளை விரட்டும்

# கோவில் மணி ஓசை...!

ஆகம சாஸ்திரங்களின் படி, கோவில் மணியில் இருந்து வெளிப்படும் ஓசை எதிர்மறை சக்திகளை விரட்டி, மனதிற்கும், உடலுக்கும் நேர்மறை சக்தியை அதிகரிக்க செய்கிறது.

கோவில் மணியின் ஓசை மனிதனின் மூளை செயல்திறனை மேலோங்க செய்கிறது என்று அறிவியலில் ஒரு பின்னணியும் இருக்கிறது. கோவில் மணியில் இருந்து வெளிவரும் ஒலியானது, மூளையின் வலது மற்றும் இடது பக்கங்களை ஒரு சமநிலைக்கு கொண்டு வர உதவுகின்றது.

கோவில் மணியில் இருந்து வெளிப்படும் சத்தம் உடலில் நேர்மறை ஆற்றல் மற்றும் மூளையில் செயல்திறனை அதிகரிக்கச் செய்து, விழிப்புணர்வை மேம்படுத்தி, மனதிற்கு நிறைவான அமைதி மற்றும் நிம்மதியை அளிக்கிறது.

பூஜை ஆரம்பிப்பதற்கு முன்னால் மணி அடித்தால், அந்த மணி சப்தம் கேட்டதும் வீட்டிலுள்ள துர் தேவதைகள் போன்றவை வெளியே ஓடிவிடும். துர்தேவதை, பேய், பிசாசு போன்றவைகளுக்கு மணி சப்தம் கேட்டால் பயம்; எனவே, ஓடி விடும்.

தினமும் பூஜையின்போது பேய், பிசாசு, மணியடித்து அவைகளை விரட்டி விட்டு பூஜையை ஆரம்பிப்பர். ஒவ்வொரு நாளும் ஏன் இப்படி அடிக்க



வேண்டும் என்றால்?, ஓடிப்போன துர்தேவதைகள் இருட்டிய பின் மீண்டும் வந்து விடும். மறுநாள், மறுபடியும் மணியடித்து விரட்ட வேண்டும். அவை இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டுமே என்றால், அவை இருக்குமிடத்தில் தேவதைகள் வரமாட்டார்கள்! அதனால், மணியடித்துதான் தினமும் பூஜையை ஆரம்பிப்பது வழக்கம்.

கிராமங்களில் கூட இந்த துர்தேவதைகள் சுற்றிக் கொண்டே இருக்கும். ஆலயங்களில் காலை, மாலை மணியடிக்கும் போது, இந்த சப்தம் கேட்டதும் அந்த துர்தேவதைகள் ஓடி விடும்.

மற்ற மாதங்களை விட, மார்கழி மாதத்துக்கு சிறப்பு அதிகம். அந்த மாதம் முழுவதும் பகவானுக்கு உகந்த நாட்கள். அதனால், மார்கழி மாதத்தில் எல்லாரும் விடியற் காலையில் எழுந்து நீராடி, நெற்றிக்கிட்டு, தெய்வ பூஜையில் ஈடுபடுவர்;, ஆலயங்களுக்குச் செல்வர். இம்மாதத்தில் தெய்வ வழிபாடு மும்முரமாக இருக்கும். கிராமங்கள் என்றில்லாமல் நகரங்களிலும் இப்படி நடக்கிறது.

கிராமங்களில் மார்கழி மாதம் முழுவதும் பிரதி தினம் விடியற்காலையில் ஒவ்வொரு தெருவாக சங்கு ஊதிக் கொண்டும், மணியடித்துக் கொண்டும் வருவர். அதற்கென்று மணியடிப்பவர், சங்கு ஊதுகிறவர் உண்டு. அவர்கள் அதை தினமும் செய்வர். இதனால், கிராமத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் துர்தேவதைகள் ஓடிவிடும். இதனால் கிராம மக்கள் நோய் நொடி இல்லாமல் சுபிட்சமாக இருப்பார்கள்.



# புராணங்கள் கூறும் யுகங்கள் பற்றிய விளக்கம்

மனிதர்கள் வாழும் யுகத்தை நான்கு யுகங்களாக பிரிக்க முடியும். அவை முறையே கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலி யுகம் என்பவையாகும்.

இதில் கிருத யுகத்தில் மக்கள் அனைவரும் அறநெறியுடன் வாழும் யுகமாக பார்க்கப் படுகின்றது.

திரேதா யுகத்தில் நான்கில் மூன்று பகுதியினர் அறநெறியுடனும் ஒரு பகுதி மக்கள் அறநெறி யற்றவர்களாகவும் வாழ்வார்கள். இந்த வருடத்தில் வாழும் மனிதர்கள் 10,000 வருடங்கள் வாழ்வதாக கூறப்படுகின்றது.

அடுத்ததாக துவாபர யுகத்தில் சரிபாதி மக்கள் அறநெறியுடனும், சரிபாதி மக்கள் அறமின்றியும் வாழ்வார்கள். இவர்கள் வாழும் யுகம் 1,000 வருடங்களாக வரையறுக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் மனிதர்களின் கால அளவும், தேவர்களின் கால அளவும் வேறுபட்டு காணப்படுகின்றது. அதாவது மனிதர்களின் ஒரு வருடம் எனப்படுவது தேவர்களின் ஒரு நாளாக கணிக்கப்படுகின்றது.

இவ்வாறு அமையும் தேவ வருடமானது 12,000 வருடங்களை குறிக்கின்றது. இது "சதுர்யுகம்" என அழைக்கப்படும்.

இதற்கிணங்க புவியில் இரவு பகல் தோன்றுவதைப் போல யுகங்களும் மாறிக் கொண்டே இருக்கும். அதாவது தற்பொழுது கலியுகம் இடம்பெறுகின்றது. இதனை அடுத்து திரேதா யுகம், துவார யுகம், மீண்டும் கலியுகம் என யுகங்கள் மாறிகொண்டிருக்கின்றன.



# முற்பிறவி பாவங்களை போக்கும் மூன்றாம்பிறை தரிசனம்

மனிதன் தனது வாழ்க்கையில், காமம், வெகுளி, மயக்கம் இந்த மூன்று குணங்களை - கர்மங்களை கடந்து விட்டால் முக்தி அடையலாம் என்பது இந்து தர்மத்தின் தத்துவார்த்தம். இந்த மூன்றை ஒருவர் கடந்திட உதவுகிறது மூன்றாம் பிறை தரிசனம். சிவன், பார்வதி, விநாயகப் பெருமான் போன்ற தெய்வங்களின் சிகையை அலங்கரிக்கும் பாக்கியம் பெற்ற இந்தப் மூன்றாம் பிறையை, தரிசனம் செய்யும் வாய்ப்பும், வரமும் பெற்றவர்களின் முற்பிறவி பாவங்கள் தொலைகிறது என்பது நம்பிக்கை.

சூரியனும், சந்திரனும் ஒரே ராசியில் இணைவது அமாவாசை திதியாகும். ஒவ்வொரு அமாவாசைக்கு பிறகு வரும் மூன்றாம் நாள், மூன்றாம் பிறை நாளாகும். அமாவாசைக்கு மறுநாள் நிலவு தெரிவதில்லை. ஆனால், மூன்றாம் நாளான துவிதியை திதியில் தெரியும் நிலவு அழகாகவும், மிகவும் பிரகாசமாகவும் இருக்கும். இரவு வருவதற்கு முன்னே 6.30 மணியளவில் தோன்றும் பிறையே “மூன்றாம் பிறை”.

மனநிறைவும், மன அமைதியும் கிடைத்து மனிதனின் மனக்கஷ்டங்கள், வருத்தங்களை நீக்கும் வல்லமைப் பெற்றது மூன்றாம்பிறை தரிசனம்.

## மூன்றாம் பிறையை எப்படி வணங்க வேண்டும் ?

### மாங்கல்ய பலன் கிடைக்க :

சந்திரனை தரிசிக்கும் வேளையில், கையில் காசை வைத்து மூடிக்கொண்டு, வலமாக மூன்று முறை சுற்றி, மீண்டும் ஒரு முறை பிறையை தரிசித்து வணங்க, பெண்களுக்கு மாங்கல்ய பலம் ஏற்படுகிறது.

### திங்கள் கிழமை மூன்றாம் பிறை கண்டால்

மூன்றாம் பிறையில் சந்திர தரிசனம் செய்து வணங்குவது ஆயுளை விருத்தியாக்கும், செல்வங்களைச் சேர்க்கும், பிரம்மஹத்தி போன்ற தோஷங்களை நீக்கும். அதுவும், திங்கட் கிழமையில் வரும் மூன்றாம் பிறையை நீங்கள் பார்த்து விட்டால், வருடம் முழுக்க நீங்கள் சந்திரனை வணங்கிய பலன்கள் எல்லாம் கிடைக்கும்.

### பிறைகள் தரும் பலன்கள்

மூன்று பிறை தொடர்ந்து தரிசித்தால் முட்டாளும் அறிவாளி ஆவான்.

நான்கு பிறை தொடர்ந்து தரிசிக்க, நம்





ஊழ்வினை தீரும்.

ஐந்து பிறை தொடர்ந்து தரிசித்தால் ஆண்டியும் அரசயோகம் பெறுவான்.

ஆறு பிறை தொடர்ந்து தரிசித்தால் திருமணம் தடையின்றி நடக்கும்.

ஏழு பிறை தொடர்ந்து தரிசிக்க தீராக் கடன் தீரும்.

பத்து பிறை தொடர்ந்து தரிசிக்க புகழ் உச்சியில் பெருமையடைவான்.

முக்தி தரும் முன்றாம் பிறை தரிசனம் செய்வோம். முற்பிறவி பாவங்கள் போக்குவோம்.



# நிறைகுடம் வைப்பது எப்படி?

# பூரண கும்பம் அறிந்து கொள்வோம்

தமிழ் மக்கள்; தங்கள் கலை, கலாச்சார, சமூக நிகழ்வுகளின் போதும், விசேட பண்டிகை கொண்டாட்டங்களின் போதும், சுபமங்கள சடங்குகள் நடைபெறும் போதும் நிறை குடம் வைத்து வரவேற்பதும், ஆராத்தி செய்வதும் ஆகம மரபு வழி வந்த வழக்கமாகும்.

சுப நாட்களில் வீட்டு வாசலில் நிறை குடம் வைப்பதன் மூலம் சகல செல்வங்களும் வீட்டில் நிரம்பப் பெற்று இருக்கும் எனவும், இதை மங்களத்தின் அறிகுறியாக இந்துக்கள் போற்றுகின்றார்கள்.

அத்துடன் நிறைகுடம் வைக்கும் இடத்தில் இலட்சுமி வாசம் செய்வாள் (வருகை தருவாள்) என்பதும் இந்துக்களின் நம்பிக்கை.

ஒரு தலைவாழை இலையை, இலையின் நுனிப்பகுதி வடக்கு முகமாகவோ அல்லது கிழக்கு முகமாகவோ அமையுமாறு வைக்கவும்.

இம்முறை அவ்விடத்திற்கு பொருந்தா விட்டால், பொதுவாக வரவேற்பு நிகழ்வாக இருந்தால், வருபவர்களுக்கு வலப்பக்கத்தில் இலையின் அகன்ற பகுதி இருக்கக் கூடியதாக வாழை இலையை வைக்கவும்.

அதன் மேல் நெல் அல்லது அரிசி பரப்பி அதன்மேல் நீர் நிரப்பிய பித்தளை அல்லது வெள்ளி, செம்பு போன்றவற்றிலலான கும்ப குடத்தை வைக்கவும்.

அதன் இரு பக்கங்களிலும் குத்துவிளக்கு ஒவ்வொன்று வைக்கவும்.

அதன் பின் ஐந்து மாவிலைகளை குடத்தின் வாயில் வைத்து, சுத்தம் செய்து வைத்த முடித்தேங்காயை அதன் மேல் வைக்கவும்,

அமங்கல கிரியைகளுக்கு கும்பம் வைக்கும் போது மாத்திரம் மூன்று மாவிலைகள் வைப்பார்கள்.

ஒரு தட்டத்தில் (தட்டில்) வாழைப் பழச் சீப்பு ஒன்றும், வெற்றிலை பாக்கு (வெற்றிலை ஒற்றை விழும் எண்ணில்), தேசிக்காய் ஒன்றும் (வைக்கலாம் அல்லது தவிர்க்கலாம்) கும்பத்தின் இடது பக்கத்தில் வைத்து, அதனுள் மஞ்சளினால் செய்த பிள்ளையார் அல்லது சிறிய பிள்ளையார் சிலையையும் வைக்கவும்.

இன்னொரு தட்டத்தில் அல்லது தட்டில் சந்தனம், குங்குமம், பன்னீர்ச் செம்பு, விபூதி வைத்து வலப்பக்கத்தில் வைக்கவும்.

நிறை குடத்திற்கு ஒரு மாலையும் போடலாம். அல்லது பூக்களினால் அலங்கரிக்கலாம். குத்து விளக்குகளிற்கும் பூக்கள் வைக்கலாம்.

நிகழ்வு ஆரம்பமாவதற்கு முதல் இரண்டு குத்து விளக்குகளிலும் திரிகளில் ஒவ்வொன்றையோ அல்லது ஐந்தையுமோ கொழுத்தி விடவும். ஒரு தேங்காயை உடைத்து கும்பத்தின் இரு பக்கங்களிலும் வைக்கவும். அத்துடன் தூபம் ஏற்றுதல் வேண்டும்.

ஒன்று அல்லது மூன்று சாம்பிறாணிக் குச்சிகளைக் கொழுத்தி வாழைப் பழத்தில் குத்தி விடலாம்.

## ஆராத்தி எடுத்தல்

மங்கள காரியங்களிற்கு ஆராத்தி எடுக்கும் போது சுமங்கலிப் பெண்கள் இருவர், கும்பத்திற்கு முன்னால் நின்று ஆராத்திக் குரியவரை கும்பத்தை பார்த்துக் கொண்டு நிற்கச் செய்து, ஆராத்திக்கு உரியவரின் கீழ்ப்



பக்கத்தில் ஆராத்தித் தட்டை வலது, இடது பக்கமாக மூன்று முறை ஆட்டி, அதன்பின் ஆராத்திக் குரியவரின் வலது பக்கமாக மேலே உயர்த்தி, இடது பக்கத்தால் கீழே இறக்கி, மீண்டும் கீழே மூன்று முறை ஆட்டி திரும்பவும். இவ்வாறு மூன்று முறை செய்யவும்.

மூன்றாவது சுற்று இறுதியில்

ஆராத்தித் தட்டை நடுவே கொண்டு வந்து திரி ஆராத்தியாயின் அவற்றை தட்டில்லுள்ள மஞ்சள்-குங்கும கலவையில் அமிழ்த்தி நூர்த்தபின் திரிக் கரியுடன் சேர்ந்த மஞ்சளை-குங்குமத்தை ஆராத்திக் குரியவரின் நெற்றியில் திலகமாக இட்டு நாவூறு கழிக்க வேண்டும்.

இதனை ஆராத்தி எடுத்த சுமங்கலிப் பெண்கள் இருவரும் செய்தல் வேண்டும்.

அமங்கல கிரியைகளுக்கு மாத்திரம் உரியவருக்கு இடது பக்கமாக உயர்த்தி ஆராத்தி செய்வார்கள்.

## மாவிலை கட்டுதல்



மங்கள வைபவங்களுக்கு பந்தலில் மாவிலை கட்டும் போது மாவிலையின் முன்பக்கத்திற்கு நூலை கயிற்றை வைத்து முன்பக்கமாக மாவிலையை மடித்தல் வேண்டும்.

அமங்கல கிரியைகளின் போது மாத்திரம் மாவிலை பின்பக்கமாக மடிக்கப்படுகின்றது.

## பூரண கும்பம்

உலகமும் அதிலுள்ள தாவர சங்கமப் பொருள்களும், சகல ஆத்மாக்களும் நீரிலிருந்தே உண்டாகின்றன.

மறுபடியும் பிரளய காலத்தில் தண்ணீரிலேயே லயமாகி விடுவதாக வேதம் கூறுகின்றது.

ஆகையால் ஆதிகர்த்தாவாகிய இறைவன் நீரின் மூலம் உருவ வழிபாட்டுக்குக் கொண்டு வருவதே பூரண கும்பத்தின் அர்த்தம்.

இப்பூரண கும்பத்தை மனித உடலாக பாவித்து, அதில் இறைவனை தியான, ஜப, பிரார்த்தனையின் மூலம் யாகசாலையில் வைத்து யாகமும், பூஜைகளும் செய்யப்படுகின்றன.

## கும்ப தத்துவம்

மங்கள காரியங்களுக்காக வைக்கப்படும் நிறைகுடத்தில் 5 மாவிலைகள் இடம் பெறுகின்றன.

இவ் ஐந்து மாவிலைகளும் ஐம்புலன்களையும் நினைவு படுத்துவதாக அமைகின்றன.

குடமும், நீரும் நமது உடலை நினைவு படுத்துவதாகும். நிறைகுடமாகிய பூரண கும்பத்தை ஒரு முழுமதியாக ஒப்பிட்டார் கம்பர்.

எப்படியிருப்பினும் மனித உடல் ஐம்புலன், சிரசு, இவற்றை அடக்கும் கருவியாக பூரணகும்பம் இடம்பெறுகின்றது. பூரண கும்பம் இல்லாத சடங்குகளே இல்லை என்றே கூறலாம்.

# தன்னை காதலித்த பெண்ணுக்கே சாபமிட்ட விநாயகர்

உலகம் முழுவதும் உள்ள இந்துக்களால் குறிப்பாக இந்தியாவில் இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு கடவுள் என்றால் அவர் பிள்ளையார்தான். இந்து மதத்தில் ஒவ்வொரு கடவுளை வழிபடவும் ஒரு விதிமுறையும், கட்டுப்பாடும் இருக்கும், ஆனால், பிள்ளையார் மட்டும் அந்த விதிமுறைகளுக்குள் அடங்க மாட்டார். ஏனெனில் முழுமுதற் கடவுளான கணேசன் அனைத்து விதிகளையும் கடந்தவராவார்.

வினைதீர்க்கும் விநாயகரை வணங்கினால் எந்த சாபமாக இருந்தாலும் விலகிவிடும் என்று கூறுவார்கள். ஆனால், அந்த விநாயகரே ஒருவருக்கு சாபமிட்ட சம்பவம் உள்ளது. அதுவும் அவரை விரும்பிய பெண்ணுக்கே! விநாயகர் சாபமிட்டார். விநாயகர் ஏன் தன்னை விரும்பிய பெண்ணுக்கே சாபம் கொடுத்தார்? யார் அந்த பெண்? விநாயகர் கொடுத்த சாபத்தின் விளைவு என்ன?



இந்து புராணங்கள் முழுவதுமே நிறைய காதல் கதைகள் உள்ளது. சிவன் - பார்வதி, விஸ்ணு - லக்சுமி, இராமன் - சீதை, முருகன் - வள்ளி என பெரும்பாலான கடவுள்கள் காதலித்தனர். எப்படி வெற்றிகரமான காதல்களாக இவை இருக்கிறதோ? அதேபோல தோல்வியடைந்த காதல்களும் இருக்கிறது. அதில் குறிப்பிடத்தக்க ஒன்றுதான் விநாயகரை விரும்பிய துளசியின் காதல் கதை.

துளசி மரணத்தின் கடவுளான எமதர்மனின் மகள் ஆவார். அவர் தன் இளம் வயதில் விஸ்ணுவின் தீவிர பக்தையாக இருந்தார். அவர் தினமும் கங்கை நதிக்கரையில் உள்ள விஸ்ணுவின் கோவிலுக்கு சென்று நதியில் நீராடிவிட்டு, விஸ்ணுவை வழிபடுவதை வழக்கமாக கொண்டிருந்தார்.

இவ்வாறு தினமும் செய்து கொண்டிருந்த போது, ஒரு நாள் கங்கையின் மறுகரையில் ஒருவர் தியானத்தில் அமர்ந்து இருப்பதை பார்த்தார். அவரின் தேகத்தை கண்டு மயங்கிய துளசி அவர் மேல் காதலில் விழுந்தார். அந்த தியானத்தில் இருந்தவர்

வேறு யாருமல்ல விநாயகர்தான்.

தியானத்தின் போது அவர் எழுப்பிய ஒலி அவரின் வசீகரத்தை மேலும் அதிகரித்தது. இதனால் அவரிடம் சென்று தன் காதலை வெளிப்படுத்த எண்ணினார். அதனை நிறைவேற்றவும் செய்தார். உடனடியாக பிள்ளையாரிடம் சென்று தன்னை மணந்து கொள்ளும்படி கேட்டார்.

இதனை சற்றும் எதிர்பார்க்காத பிள்ளையார் அமைதியாக துளசியின் காதலுக்கும், திருமணம் பற்றிய வேண்டுகோளுக்கு மறுப்பு தெரிவித்தார். துளசி அதற்கு காரணம் கேட்டபோது, "தான் தன் தந்தை சிவபெருமானுக்கு எப்படி பார்வதி தேவி சிறந்த துணையாக இருக்கிறாரோ? அதேபோல தானும், தனக்கு தன் அன்னையை போல இருக்கும் பொருத்தமான பெண்ணையே திருமணம் செய்துகொள்ள இயலும்" என்று கூறினார்.

விநாயகரின் இந்த பதில் துளசியின் கோபத்தை அதிகரித்தது, இதை தனக்கு நேர்ந்த அவமானமாக கருதினார். தன் உணர்ச்சிகளை மதிக்காத பிள்ளையாரை, அதற்காக தண்டிக்க எண்ணினார்.



எனவே, பிள்ளையாருக்கு சாபமிட துணிந்தார்.

தன் காதலை மதிக்காத பிள்ளையாருக்கு வருங்காலத்தில் அவர் எண்ணங்களுக்கு எதிராகவே திருமணம் நடக்க வேண்டும் என்று சாபமிட்டார்.

அதுவரை பொறுமை காத்த பிள்ளையார் துளசியின் சாபத்தால் கோபமுற்றார். எனவே, வருங்காலத்தில் நீ ஒரு அசுரனைத்தான் திருமணம் செய்து கொள்வாய் என்று துளசிக்கு சாபமிட்டார்.

விநாயகர் அளித்த சாபத்தின் விபரீதத்தை உணர்ந்த துளசி தான் செய்த தவறை உணர்ந்தார். உடனடியாக தன் தவறை உணர்ந்த துளசி விநாயகரிடம் மன்னிக்கும்படி கெஞ்சினார். துளசி கண்ணீர்விட்டு கெஞ்சுவதை பார்த்த விநாயகர் மனமிறங்கினார்.

பிள்ளையார் தான் அளித்த சாபத்தையே ஆசீர்வாதமாக மாற்றினார். அதன்படி விஷ்ணுவின் அருளால் துளசி, புனிதமான துளசி செடியாக மறுபிறப்பு எடுப்பாய் எனவும், விஷ்ணுவை உன்னை கொண்டு பூஜிப்பார்கள் எனவும் கூறினார். ஆனாலும், நீ என்னிடம் இருந்து எப்போதும் விலகிதான் இருப்பாய். என்னை உன்னை கொண்டு பூஜிக்கக் கூடாது என்று கூறினார்.

விநாயகர் கொடுத்த சாபம் பலித்தது, அதன்படி துளசி அரக்கர்களின் மன்னனான ஜலந்தரனையே மணக்க நேரிட்டது. அரக்கனான அவன் செய்த தவறுகளுக்குகாக பின்னாளில் அவனை சிவபெருமானால் வதைக்கப்பட்டான். அதன்பின் தானும் இறந்த துளசி, விநாயகர் கூறியது போலவே புனிதமான துளசி செடியாக பிறந்தார்.

திருச்சிற்றம்பலம்

## சைவநெறிக்கூடம்

# அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

மாலை 18.00 மணிமுதல்
20.00 மணிவரை
பூசை வழிபாடுகள்
இடம்பெறும்.

**Der Verein SAIVANERIKOODAM**
**Arulganamigu Gnanalingesurar Tempel**
**Europaplatz.01, 3008 Bern, Switzerland**
**( 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96 / 031 302 09 56**
**www.saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam**
**saivanerikoodam@hotmail.ch**

அனைத்து நாட்களும்
காலை 09.00 மணி முதல்
இரவு 20.00 மணி வரை
திருக்கோவில் திறந்திருக்கும்.

# 2019ம் ஆண்டு நாட்காட்டி

### சுறவம் (தை)

| | |
|---|---|
| 31.12.18 திங்கட் கிழமை | பிறக்கும் 2019 புதிய ஆண்டை முன்னிட்டு, திங்கட்கிழமை இரவு (31.12.18) 00.00 மணிக்கு சிறப்புவழிபாடு இடம்பெறும். |
| 01.01.19 செவ்வாய்க் கிழமை | பொதுப் புத்தாண்டை முன்னிட்டு அன்று திருக்கோவில் காலை 06.00 மணி முதல் இரவு 20.30 மணி வரை திறந்திருக்கும். நண்பகல் சிறப்பு வழிபாடு நடைபெறும். |
| 03.01.19 வியாழக் கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணி முதல். |
| 05.01.19 சனிக் கிழமை | மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணி முதல். |
| 15.01.19 செவ்வாய்க் கிழமை | தைப் பொங்கல் காலை 9.00 மணி முதல் வழிபாடு ஆரம்பமாகி 12.00 மணிக்கு சூரியப் பொங்கல் இடம்பெறும். மாலை சிறார்களுக்கு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் பொங்கற்பரிசுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். சுடரோன் கொடுநுகம் புகும் விழா (மகரசங்கராதி) மணிகண்டன் ஐயப்பன் வழிபாடு |
| 18.01.19 வெள்ளிக் கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணி முதல். |
| 20.01.19 ஞாயிற்றுக் கிழமை | முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல் |
| 21.01.19 திங்கட் கிழமை | சுறவத் திங்கள் காற்குளம் (தைப்பூசம்) மாலை 16.30 மணிமுதல் |
| 25.01.19 வெள்ளிக் கிழமை | சண்டேச்சுரர் குருபூசை, சிறப்பு வழிபாடு 18.30 மணிமுதல் |

### கும்பம் (மாசி)

| | |
|---|---|
| 01.02.19 வெள்ளிக் கிழமை | ஞானலிங்கேச்சுரம் திருக்குட முழுக்கு 4ம் ஆண்டு நிறைவு திருச்சங்கு முழுக்கு மற்றும் சிறப்பு வழிபாடு மாலை 18.00 மணிமுதல். |
| 02.02.19 சனிக் கிழமை | காரிக் கழுவாய் (சனிப் பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 04.02.19 திங்கட் கிழமை | மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல். |
| 17.02.19 ஞாயிற்றுக் கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 19.02.19 செவ்வாய்க் கிழமை | கும்பத் திங்கள் கொடுநுகவிழா (மாசிமகம்), முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 17.00 மணிமுதல் |
| 21.02.19 வியாழக் கிழமை | திருவள்ளுவர் குருபூசை, மாலை 17.00 மணிமுதல் |

### மீனம் (பங்குனி)

| | |
|---|---|
| 03.03.19 ஞாயிற்றுக்கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 04.03.19 திங்கட்கிழமை | பெரும் சிவனிரவு நோன்பு (சிவராத்திரி) ,மாலை 17.00 மணிமுதல் |
| 06.03.19 புதன்கிழமை | மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல். |
| 18.03.19திங்கட்கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 20.03.19புதன்கிழமை | மீனத் திங்கள் (பங்குனி) உத்தரம் மற்றும் முழுமதி சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல் |




# Radio - by - Phone

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற அழையுங்கள்

**00 49 231 700 977 60**



15 YEARS ANNIVERSARY

தொலைபேசி இலக்கத்தில்

## ஐரோப்பியத் தமிழ் வானொலி

அழையுங்கள்!
வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

- 0221 9888014
- 01 80140659
- 044 5133032
- 0330 332 6349
- 0787 72527
- 6474969717
- 5149003078
- 7167480305
- 0280725194

ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி



மேலதிக விபரங்களுக்கு... **www.etr.fm**